செய்தி வெளியீடு எண்: 504 நாள் : 18.09.2013

பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்களின் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள், நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பது, பண்டிகை காலங்கள், வடகிழக்கு பருவமழை காலங்களில் அத்தியாவசியப் பொருட்கள் நகர்வு தொடர்பாக எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியன குறித்த மாநில அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் இன்று (18.09.2013) சென்னை கீழ்ப்பாக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செப்டம்பர் 2013 மாதத்திற்கு அரிசி, சர்க்கரை, கோதுமை முதலான பொருள்களும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற பருப்பு, பாமாயில், முதலியனவும் 83 சதவீதத்திற்கு மேல் கிடங்குகளிலிருந்து அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவைக்கென 35 ஆயிரம் மெ.டன் துவரம் பருப்பு, 25 ஆயிரம் மெ.டன் உளுத்தம் பருப்பு, 18 ஆயிரம் மெ.டன் பாமாயில் ஆகியன கொள்முதல் செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தேவைக்கென கிடங்குகளில் சுமார் நான்கு மாத பொது விநியோகத் திட்டத்திற்குப் போதுமான 13 இலட்சம் மெ.டன் அரிசி மற்றும் சர்க்கரை, கோதுமை ஆகியனவும் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளது.

இந்திய உணவுக் கழக கிடங்குகளிலிருந்து இயக்கம் செய்யப்படும் அரிசி, கோதுமை முதலான பொருள்கள் உரிய தரத்துடன் இருப்பதை உறுதி செய்த பின்னரே பொது விநியோகத் திட்ட கிடங்குகளுக்கு அனுப்பப்பட வேண்டும். தரமில்லாத அரிசியை இயக்கம் செய்ய இந்திய உணவுக் கழக கிடங்குகளுக்கு வற்புறுத்தக் கூடாது என ஏற்கனவே சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தேவைக்கேற்ப அரிசியின் தரம் குறைந்து காணப்பட்டால் அதனை இந்திய உணவுக் கழக தரக் கட்டுப்பாடு அலுவலர்களின் நேரடி கவனத்திற்கு கொண்டுச் சென்று அவர்களுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைமை அலுவலக தரக்கட்டுப்பாடு மேலாளர் இணைந்து (Joint Sampling) அரிசி மாதிரியை பகுப்பாய்வு செய்து தரம் உறுதி செய்த பின்னரே இயக்கம் செய்யப்பட வேண்டும்.

எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்கு தேவையான புழுங்கலரிசி, பச்சரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் முதலான அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் கிடங்குகளிலிருந்து அங்காடிகளுக்கு அக்டோபர் மாதத்திற்குள்ளாகவே தொய்வின்றி நகர்வு செய்து முடிக்கப்பட வேண்டுமென மண்டல மேலாளர்களை மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினர். ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் தரமான

வெளிச்சந்தை அரிசி, இத்திட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை **279** சிறப்பு அங்காடிகள் மூலம், **45,600** குவிண்டால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனால் வெளிச்சந்தையில் அரிசியின் விலை வெகுவாக குறைந்து கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் **33,712** நியாய விலை அங்காடிகள் மூலம் விநியோகம் செய்யப்படும் பொது விநியோகத் திட்ட பொருள்கள் தரமானதாக, எடை குறைவின்றி, உரியவர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியது உணவுத்துறை அலுவலர்களின் தலையாய கடமை என்பதால், மண்டல மேலாளர்கள் அனைவரும் நிர்ணயிக்கப்பட்டுள்ள, காலத்திற்குள்ளாகவே அனுமதிக்கப்பட்டுள்ள வழித்தடத்தில் காலதாமதமின்றி இயக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். நகர்வு செய்யப்படும் மூட்டைகள் சரியான முறையில் எடையிட்டு எடைச்சீட்டுடன், மூட்டைகளில் வரிசை எண் குறிப்பிட்டும், வழங்கல் சீட்டில் அங்காடிகள் விபரம் குறிப்பிட்டும் அந்தந்த மாத கலர் நூலினால் தைத்து அங்காடிகளுக்கு இயக்கம் செய்யப்பட வேண்டும். மாவட்ட அளவில் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் பொருள்கள் கேட்பு படிவம் அனுப்புதல், அத்தியாவசியப் பொருள்கள் ஒதுக்கீடு ஆணை பிறப்பித்தல் முன்நகர்வு ஆகியவற்றில் ஒருமித்த கருத்து ஏற்படும் வகையில், மண்டல மேலாளர்கள் அனைவரும், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர், மாவட்ட வழங்கல் அலுவலர்கள் ஆகியோருடன் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் பருவமழை தொடங்கியிருப்பதால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், காவேரி டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பிற மாவட்டங்கள் அனைத்திலும் போதுமான அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் கிடங்குகளில் இருப்பு வைத்து அங்காடிகளுக்கு அவ்வப்போது நகர்வு செய்ய முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், தாழ்வான பகுதிகளில் மழை நீர், வெள்ளம் புகுந்து கிடங்குகள் மற்றும் நியாய விலை அங்காடிகளில் உள்ள அத்தியாவசியப் பொருள்கள் சேதமடையமால் பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. மழைநீரில் சேதமடைந்த அரிசி முதலான அத்தியாவசியப் பொருள்கள் அங்காடிகளில் காணப்பட்டால் அவற்றை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பார்வையிட்டு, அப்பொருள்களை மக்களுக்கு விநியோகம் செய்யாமல் கிடங்குகளுக்கு திருப்பி அனுப்பி தரமான பொருள்களை மட்டுமே பெற்று விநியோகம் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில், செயல்படுத்தப்பட்டு வரும் **"விலையில்லா அரிசி"** விநியோகம் போன்ற உன்னத திட்டங்களின் முழுப்பயன்களும் ஏழை, எளிய மக்களை சென்றடையவும், அத்தியாவசியப் பொருள்கள் பொது விநியோகத்திட்ட கிடங்குகளிலிருந்து கடத்தப்படுவதை தடுக்க கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளை எடுக்க அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டார். தமிழ்நாட்டில் இன்று வரை **20,736** கடத்தல் வழக்குகள் பதிவு

செய்யப்பட்டு, **12,711** நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் **460** நபர்கள் தடுப்பு காவல் சட்டத்தின்படி (BM Act) கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அரசு உணவுத்துறை செயலாளர் திருமதி.எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் மற்றும் முதன்மைச் செயலாளர் திரு.ஸ்வரண்சிங், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை கூடுதல் இயக்குனர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., இந்திய உணவுக் கழக உயர் அலுவலர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9